

தஞ்சாவூர் மாவட்டம் வருகை தந்த உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் அவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம். மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 02.10.2024 அன்று மலர்க் கொத்து கொடுத்து வரவேற்றார்கள். மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.கல்யாணசுந்தரம், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன் (திருவையாறு), டி.கே.ஜி.நீலமேகம் (துஞ்சாவூர்), க.அன்பழகன் (கும்பகோணம்), கா.அண்ணாதுரை (பட்டுக்கோட்டை), என்.அசோக்குமார் (பேராவூரணி), மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன், மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், மாவட்ட ஊராட்சித்தலைவர் திருமதி.உஷாபுண்ணியமூர்த்தி, துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி மற்றும் பலர் உடன் உள்ளனர்.



மறைந்த முன்னாள் சேலம் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் வீரபாண்டி ஆ. ராஜா அவர்களின் நினைவு நாளையொட்டி வீரபாண்டி பூலாவரில் உள்ள அவரது நினைவிடத்தில் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் தலைமையில் கழகத்தினர் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். இந்நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ்குமார், சின்னதுரை, மாவட்ட அவைத் தலைவர் முரா. கருணாநிதி, டாக்டர் தருண், ஏ.ஏ.ஆறுமுகம், முன்னாள் எம்.எல்.ஏ. கோபால், தமிழ்ச்செல்வன், முனைவர் அ. சீனிவாசன், சந்திரமோகன், மலர்விழி ராஜா, தமிழரசன், ரேகா பிரியதர்ஷினி, ஒன்றிய செயலாளர்கள் வெண்ணிலா சேகர், உமாசங்கர், மாணிக்கம், டாக்டர் செழியன், மணி, சித்தார்த்தன், மாதேஸ்வரன், ப்ரண்ஸ் ரமேஷ், வரத. ராஜசேகரன், சிவராமன்,மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், திரளாக கலந்து கொண்டு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

# தஞ்சை வடக்கு மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி!

## மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிக்கை!

தஞ்சாவூர் அக்.4-



தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட திருவிடைமருதூர், கும்ப கோணம், பாபநாசம் ஆகிய சட்டமன்ற தொகுதிகள் வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் கண்காணிப்பு குழுக்களில் நியமிக்கப் பட்டுள்ள வாக்காளர் பட்டில் சரிபார்க்கும் பணியை சிறப்பாக செய்ய வேண்டுமாய் மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி தஞ்சை வடக்கு மாவட்டத்தில் உள்ள திருவிடைமருதூர், கும்பகோணம், பாபநாசம் ஆகிய சட்டமன்ற தொகுதிகள் வாரியாக நியமிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி முகவர்கள், பூத்கமிட்டி உறுப்பினர்கள், ஆகியோர்களை கண்காணிப்பதற்கும், நேரில் சந்தித்து வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியை மேற்கொள்வதற்கும், அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர், பகுதி கழக செயலாளர்கள் தலைமையில் தொகுதி பார்வையாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாநகர செயலாளர் முன்னிலையில் மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அட்டவணைப்படி ஒன்றிய, நகர, பேரூர், பகுதி கழகத்திற்கு கண்காணிப்பாளர்களாக நியமிக்கப்படுகிறீர்கள்

மாவட்ட கழகம் சார்பில் நியமிக்கப்பட்ட பணிக்குழுவில் உள்ள மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், தங்கள் அணியின் துணை அமைப்பாளர்களுடன் இணைந்து அந்தந்த வாக்குச்சாவடிக்கு நேரில் சென்று பூத் நிர்வாகிகள் (பி.எல்.சி), பி.எல்.ஏ2 ஆகியோர்களுடன் நேரில் கள ஆய்வு செய்து 01.01.2025 அன்று 18 வயது நிறைவடையும் புதிய இளம் வாக்காளர்களை கண்டறிந்து அவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்க தேவையான ஆவணங்கள், மார்பளவு புகைப்படம் ஆகியவற்றை தயார் நிலையில் வைக்கஆயத்தப்படுத்துவதுடன், முகாம் நடைபெறும் நாளான அக்டேபர் 29 முதல் டிசம்பர் 24 வரை மனு செய்யலாம்.

இது தவிர, தமிழ்நாடு மாநில தலைமை தேர்தல் அதிகாரி அவர்களால் அறிவிக்கப்பட்டு, வார இறுதி நாட்களான சனி மற்றும் ஞாயிறு நிர்ணயிக்கப்பட்ட மையங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படவுள்ளன. மேற்குறிப்பிட்ட நாட்களில் விடுபட்ட வாக்காளர்களையும், இடம் மாறிய வாக்காளர்களையும், கண்டறிந்து அவர்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள்

மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று, பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த முகாம்களில் கொடுக்க உதவிட வேண்டும். இதனடிப்படையில் 2025ஆம் ஆண்டு ஜனவரி 01ஆம் தேதி18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம்பெறாத பெயர்களையும் புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும், புதிய வாக்காளர்பட்டியலில் சேர்க்கவும் தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், அக்டோபர், நவம்பர் மாதங்களில் வாக்காளர்பட்டியல் சரிபார்கும் பணியினை செய்ய தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், முகாம் நடைபெறும் நாட்களில் வாக்குச்சாடிக்குச் சென்று படிவம்6, 6ஏ, 7, 8 போன்ற மனுக்களின் விபரங்கள்சேகரிப்பதுடன் அன்றைய தேதியில் நமது கழகத்திற்கு ஆதரவு நபர்கள் எத்தனை பேர், புதியதாக வாக்காளர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர் என்ற தகவலை தலைமைக்கு அனுப்ப ஏதுவாக மாவட்டகழக அலுவலகத்திடம் ஒப்படைப்பதற்கு பட்டியல் தயார் செய்து அனுப்ப கண்காணிப்புக் குழு, கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்களை முழுமையாக இப்பணியில் ஈடுபடுத்திக்கொண்டு இந்த பணியின் விபரத்தினை மாவட்ட கழக அலுவலகத்தில் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

---

### விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் கவனத்திற்கு

# கழகத் தோழர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் - வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2) - பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) - வாக்காளர் பட்டியல் சரி பார்த்தல் - வாக்காளர் சேர்த்தல் பணியை சிறப்பாக செய்திடுவீர்!

## மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர் வேண்டுகோள்!



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, இந்திய தேர்தல் ஆணையம் வருகின்ற 1.1.2025 தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட புகைப்படத்துடன் கூடிய வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 29.10.2024 அன்று வெளியிட உள்ளது. விழுப்புரம் வடக்கு மாவட்டத்திலுள்ள திண்டிவனம் , செஞ்சி, மயிலம் சட்டமன்ற தொகுதிகளிலும், 29.10.2024 முதல் 28.11.2024 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் - திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. இதுதவிர தலைமைத் தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி, ஞாயிறு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 வரை சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன்வந்து வாக்காளர்கள் பட்டியலில் உள்ள தங்களது விவரங்களை சரிபார்த்து, விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 1.1.2025 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று, பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் கொடுக்க வேண்டும்.

இதனடிப்படையில் 2025ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி 18 வயது நிரம்பியவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம்பெறாத பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்துள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தலுக்கு படிவம் 6-லும், பெயர் நீக்கம் செய்திட படிவம் 7-லும், வாக்காளர் விபரங்களில் உள்ள தவறுகளை திருத்தம் செய்திட, ஒரே சட்டமன்றத் தொகுதிக்குள் திருத்தம், முகவரி மாற்றம், நகல் வாக்காளர் அடையாள அட்டை பெற (Replacement Id card) படிவம் 8-லும், அயல்நாடு வாழ் வாக்காளர் சேர்க்க (NRI Voters) படிவம் 6ஏ, ஆதார் எண் வாக்காளர் அடையாள அட்டையுடன் இணைக்கப் படிவம் 6 பி, விண்ணப்பம் பூர்த்தி செய்து அளித்திட வேண்டும். மேலும் வாக்காளர் சேர்ப்பதற்கு www.nvsp.in மற்றும் www.voterportal.eci.gov.in என்ற இணையதளத்திலும் விண்ணப்பிக்கலாம். இதுவரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாதவர்கள் மற்றும் இடம் மாறி வந்து வாக்காளர்களாக சேர்க்க விரும்புபவர்களும், பெயர் சேர்த்துக் கொள்ள வேண்டிய விண்ணப்பப் படிவமான படிவம் - 6 ஐ முழுமையாக பூர்த்தி செய்திட வேண்டும். குறிப்பாக படிவம் - 6ன் காலம் IV-ல் மனுதாரரது முந்தைய முகவரியினை தவறாது எழுதிட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

1. வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் 29.10.2024
2. பெயர்களைச் சேர்க்க / நீக்க / திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் 29.10.2024 முதல் 28.11.2024 வரை.
3. சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள் தலைமை தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி, ஞாயிறு நாட்கள்.
4. இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் 6.1.2025

மேலும் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியில், விழுப்புரம் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட, மாநில, ஒன்றிய, நகர, பேரூர், ஊர்க்கிளை, வார்டு கழகச் செயலாளர்கள், துணை செயலாளர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள், இளைஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், பிற அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட துணை அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், துணை அமைப்பாளர்கள், மற்றும் வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA-2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழகத் தோழர்கள் அனைவரையும் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் இந்த பணியின் விவரத்தினை மாவட்டக் கழகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு : வாக்காளர் சேர்க்கும் பணியின்போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள BLA-2க்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), இந்தப் பணியில் முழுமையாக ஈடுபட்டு 2026 சட்டமன்ற தேர்தல் வரை, தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள BLOக்களுடன் உடனிருந்து கண்காணிக்க கேட்டுக்கொள்கிறேன்.

**ப.சேகர்**
பொறுப்பாளர்
விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க

---

### மனுதர்ம கொள்கைக்கு பதிலளிக்கக் கூடிய வகையில் - எனக்கு உயர்கல்வி

# அமைச்சராகப் பொறுப்பு வழங்கியது திராவிட ஆட்சியின் எடுத்துக்காட்டாகும்!

## உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் பேட்டி!

தஞ்சாவூர் அக்.4-



உயர்கல்வித்துறை அமைச்சராகப் பொறுப்பேற்று சொந்த தொகுதியான திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதிக்கு வருகை தந்த உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியனுக்கு மாவட்ட எல்லை பகுதியான அணைக்கரையில் மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி. தலைமையில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, முன்னிலையில் நாதஸ்வர மேளதாளங்கள் முழங்க ஆயிரக்கணக்கான தொண்டர்கள் புடைசூழ உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து தஞ்சை வடக்கு மாவட்டத்தை சேர்ந்த கழக நிர்வாகிகள் சால்வை அணிவித்தும், மலர் மாலைகள் அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர்.

தொடர்ந்து செய்தியாளர்களிடம் உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்ததாவது,

திராவிட மாடல் ஆட்சி என்பது எல்லோருக்கும் எல்லாம் என்ற அடிப்படையில் ஏழை குடும்பத்தில் பிறந்த தொண்டனை உயர்கல்வித்துறை அமைச்சர் ஆக்கியது தான். கல்வி என்றால் நீ பயிலக் கூடாது. கல்வி என்ற சொல் உன் காதில் கேட்டாலே காதில் ஈயத்தை காய்ச்சி ஊற்றுவேன் எனும் மனுதர்ம கொள்கைக்கு பதிலளிக்கும் வகையில் எந்த சமுதாயத்தில் பிறந்தவர்கள் கல்வி பயிலக் கூடாது என்று சொன்னார்களோ இந்த சமுதாயத்தை சேர்ந்த என்னை உயர்கல்வித்துறை அமைச்சர் ஆக்கியது திராவிட மாடல் ஆட்சியாகும். ஒட்டு மொத்த இந்தியாவில் உள்ள பட்டியலின மக்களை காக்கக்கூடிய காவல் அரணாக முதல்வர் விளங்குகிறார் என்பதற்கு இதுவே எடுத்துக்காட்டாகும். 50 ஆண்டுகாலம் இல்லாத சாதனையை உயரிய துறையான உயர்கல்வித்துறையில் பட்டியல் இனத்தை சார்ந்தவரை அமைச்சராக்கி வரலாற்று சாதனையை முதல்வர் புரிந்துள்ளார். உயர்நீதிமன்ற நீதிபதியாக பட்டியல் இனத்தை சேர்ந்தவர் இடம்பெற வேண்டும் என பெரியாரும், அண்ணாவும் நினைத்ததை தலைவர் கலைஞர் நிறைவேற்றி னார். அந்த அடிப்படையில் உயர்கல்வித்துறையில் பட்டியல் இனத்தை சேர்ந்தவருக்கு வாய்ப்பளித்தது முதல்வர் அவர்களின் செயல் திராவிட மாடலுக்கு எடுத்துக்காட்டாகும். முதல்வர் என்ன நினைக்கிறாரோ, துணை முதல்வர் உதயநிதிஎன்னநினைக்கிறாரோ அதனை நிறைவேற்றும் சேவகனாக என்றும் பணியாற்றுவேன் என கூறினார்.

அதனை தொடர்ந்து திருப்பனந்தாள், சோழபுரம், அம்மாசத்திரம், திருபுவனம், திருவிடை மருதூர் கலைஞர் பாசறை ஆகிய இடங்களில் கழக தோழர்களின் வரவேற்பை பெற்றார். பின்னர் ஆடுதுறையில் உள்ள முன்னாள் அமைச்சர் கோசி.மணி அவர்கள் இல்லம் சென்று அவரின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார். ஆடுதுறை வீர சோழன் கோ.சி.மணி திருமண மண்டபத்தில் கழக தோழர்கள், வர்த்தக அமைப்பினர், கூட்டணி கட்சியினர் திரளாது கலந்துக்கொண்டு அமைச்சர் கோ.வி.செழியனை வாழ்த்தினர்.

இந்நிகழ்வில் கும்பகோணம் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா. தெட்சிணா மூர்த்தி, மாநில நிர்வாகிகள் ஆடுதுறை மு.உத்திராபதி, இராம.விஜயன், மாவட்டக் கழக நிர்வாகிகள் கோவி.அய்யாராசு, க. நசீர்முகமது, துரை.முருகன், சாஸ்தா நடராஜன், ந.ஜெயலெட்சுமி, ஒன்றிய, பகுதி, பேரூர்ச் செயலாளர், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் கலந்துகொண்டனர்.



விழுப்புரம் தெற்கு மாவட்டம் கோலியனூர் மேற்கு ஒன்றியம் எடப்பாளையம் மற்றும் கண்டம்பாக்கம் ஆகிய ஊராட்சிகளில் ஒன்றியச் செயலாளர் க.மும்மூர்த்தி தலைமையில் நடைபெற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் கழக பவள விழாவை முன்னிட்டு விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி கலந்துகொண்டு கழகக் கொடியேற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினார். சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர் அ.சிவா, டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயசந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாவட்ட துணை செயலாளர் தயா.இளந்திரையன், ஒன்றிய செயலாளர் கல்பட்டு வி.இராஜா, ஒன்றிய குழுத் தலைவர் சச்சிதானந்தம், துணைத் தலைவர் உதயகுமார் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

---

### ஈரோடு வடக்கு மாவட்டம்

# நகரம் மற்றும் பேரூர்க் கழகத்திற்குட்பட்ட வார்டு கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களால் அமைக்கப்பட்ட “தி.மு.க. ஒருங்கிணைப்புக் குழுக்” கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவின்படி, வரவிருக்கும் 2026 சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் பொருட்டு, ஈரோடு வடக்கு மாவட்டத்தில் உள்ள நகர, பேரூர்களில் உள்ள வார்டுகளில், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிட, கீழே குறிப்பிட்டுள்ள நகரம் மற்றும் பேரூர் வார்டுக் கழக பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்கள்.

**சத்தியமங்கலம் நகரம்**

23வது வார்டு கழகப் பொறுப்பாளராக த.கிரிவேல் (76, அண்ணாநகர், தேள்கரடு, ரங்கசமுத்திரம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்) அவர்களும்;

26வது வார்டு கழகப் பொறுப்பாளராக எஸ்.குமார், (69, மீனவர் வீதி, கூத்தனூர், ரங்கசமுத்திரம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்) அவர்களும்;

**அம்மாபேட்டை பேரூர்**

அம்மாபேட்டை பேரூர், 14வது வார்டு கழகப் பொறுப்பாளராக ஆ.மோகன்ராஜ், (முனியப்பன் கோவில் வீதி, கோபி வீதி, அத்தாணி, ஈரோடு மாவட்டம்) அவர்களும்;

**பி.மேட்டுபாளையம் பேரூர்**

பி.மேட்டுபாளையம் பேரூர், 10வது வார்டு கழகப் பொறுப்பாளராக மா.ஹரிஹரசுதன், (வ.உ.சி.வீதி, பி.மேட்டுபாளையம், ஈரோடு மாவட்டம்) அவர்களும்;

**கொளப்பலூர் பேரூர்**

கொளப்பலூர் பேரூர், 15வது வார்டு கழகப் பொறுப்பாளராக ப.கோவிந்தன் (29/21, சானார்பாளையம், கொளப்பலூர், ஈரோடு மாவட்டம்) அவர்களும்;

**அரியப்பம்பாளையம் பேரூர்**

அரியப்பம்பாளையம் பேரூர், 8வது வார்டு கழகப் பொறுப்பாளராக அ.சுரேஷ்குமார் (4, அண்ணா வீதி, அரியப்பம்பாளையம், ஈரோடு மாவட்டம்) அவர்களும் நியமிக்கப்படுகிறார்கள்.

மேற்குறிப்பிட்ட வார்டு கழகங்களில் ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பிற நிர்வாகிகள் அவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 01.10.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.